# பொது இடங்களில் இருந்த 384 மின்னியல் ஸ்கூட்டர்களை மாநகர் மன்றம் பறிமுதல் செய்தது

**நமது நிருபர்**



பெட்டாலிங் ஜெயா, டிச.14-

தலைநகரைச் சுற்றியும் உள்ள பொது இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 384 மின்னியல் ஸ்கூட்டர்களை கோலாலம்பூர் மாநகர் மன்றம் பறிமுதல் செய்தது.

இந்த பறிமுதல் நடவடிக்கையை 1974 சாலை, வடிகால் மற்றும் கட்டடச் சட்டத்தின் கீழ் மாநகர் மன்ற அமலாக்கத் துறை மேற்கொண்டது.

கோலாலம்பூரைச் சுற்றிலும் உள்ள பொது இடங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் மின்னியல் ஸ்கூட்டர்கள் சம்பந்தப்பட்ட சிறப்பு நடவடிக்கையைக் கடந்த 11ஆம் தேதி (புதன்கிழமை) மாநகர் மன்றம் அமல்படுத்தியது.

இந்நடவடிக்கையின் மூலம் 1974 சாலை, வடிகால் மற்றும் கட்டடச் சட்டத்தின் கீழ் 384 ஸ்கூட்டர்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து ஸ்கூட்டர்களும் பதிவு, ஆவணப்படுத்தலுக்காக கோலாலம்பூர், தாமான் மிஹார்ஜா செராசிலுள்ள பறிமுதல் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டதாக ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.